மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி இங்கே தெரிவித்ததுபோல அந்த நபர் கட்சியின் பொறுப்பில் இல்லையென்று சொன்னால், அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அவர் கட்சியிலே இருக்கிறார் அல்லவா? இன்றும் கட்சியிலே இருக்கிறார் அல்லவா? இப்படி தோழமைக் கட்சி உறவுக்கே மாசு உண்டு பண்ணிய ஒருவர் மீது உங்கள் கட்சி என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதுதான் எங்கள் கேள்வி. ஏனென்றால், எங்கள் கட்சியில் உள்ள யாரேனும், உங்கள் கட்சி ஆட்சியில் இருக்கின்ற மத்திய அரசையோ, அல்லது உங்கள் கட்சியின் அகில இந்தியத் தலைவராகிய பாரதப் பிரதமர் அவர்களைப் பற்றியோ இப்படி ஒரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தால், தரக் குறைவாகத் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தால், இத்தனை வாரங்கள் அது நடைபெறும்வரை நான் விட்டிருக்க மாட்டேன் (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக இந்நேரம் அந்த நபர் என் கட்சியிலேயே இருந்திருக்க மாட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எங்களுடைய கட்டுப்பாட்டினை, சகிப்புத் தன்மையை, பெருந்தன்மையை எங்கள் பலவீனம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதைத்தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடு) இதிலே வேண்டாம். அவர் எங்கள் கட்சிப் பொறுப்பிலே இல்லை என்று சொல்லிவிட்டார். அதற்குப் பிறகு விவாதம் வேண்டாம். எதிர்க்கட்சித் தலைவர் பதில் சொல்லி விட்டார். (குறுக்கீடு) மேற்கொண்டு இதிலே விவாதம் வேண்டாம். உட்காருங்கள்.

3. உறுப்பினர் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைக்கப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலையில் ஏற்பட்ட ஒரு பிரச்சினை பற்றிய தீர்ப்பைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்று காலையில் திரு. இளம்வழுதி நடந்துகொண்ட விதத்தை அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் நேரிலே கண்டீர்கள். பேரவை விதி 92 மிகத் தெளிவாக ஒரு குறிப்பை உணர்த்துகிறது. “A member, while speaking, must not use his right of speech for the purpose of abstructing the business of the Assembly” என்று மிகத் தெளிவாக இருக்கிறது. பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துகிற வகையில், பேரவை நடவடிக்கைகளைத் தடுக்கிற வகையில் எந்த ஒரு உறுப்பினரும் தன்னுடைய பேச்சு உரிமையைப் பயன்படுத்திடலாகாது என்பது மிகவும் தெளிவாகத் திட்டவட்டமாக இருக்கிறது.

[1992 மார்ச் 30] (பேரவைத் தலைவர்)

ஏற்கனவே ஒரு முறை அவர் இந்த அவையிலே இருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார். பேரவை விதி 120 The Spcch may direct any member whose conduct is, in his opinion, grossly disorderly to withdraw immediately from the House, and any member so ordered to witn draw shall do so forthwith .... அவ்வாறு பேரவைத் தலைவர் 'டிஸ் ஆர்டர்லி' உறுப்பினரை உடனடியாக வெளியேறச் சொல்கிறபோது, வெளியேறி விடவேண்டும் என்று மிகத் தெளிவாக இருக்கிறது.

" If any member is ordered to withdraw a second time in the same Session, the Speaker may direct the Member to absent himself from the meetings of the Assembly for any period not longer than the remainder of the Session, and the member so, directed shall absent himself accordingly " என்று மிகத் தெளிவாக இருக்கிறது.

முற்பகல் 11–40

இதே உறுப்பினர் ஏற்கனவே இந்தக் கூட்டத் தொடரி லேயே, கடந்த 25-ஆம் தேதியும் இதேபோல வெளியேற் றப்பட்டார் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இப்படி இரண்டாவது முறையும் வெளியேற்றப்படுகிற உறுப் பினரை அந்தப் பேரவைக் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட் களுக்கும் பேரவைக்கு வரவிடாமல் அவரை வெளியேற்றுகிற உரிமை இந்த 120 ஆவது விதிப்படி பேரவைத் தலைவருக்கு இருக்கிறது. 120-வது விதியின்படி இன்றைக்கு இரண்டாவது முறையும் வெளியேற்றப்பட்டிருக்கிற இளம் வழுதி மீண்டும் இந்தப் பேரவைக்கு இந்தக் கூட்டத் தொடர் முடியும் வரை வரலாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதே உறுப்பினரை, ஏதோ வேண்டுமென்று செய்கிறார்கள். எங்களை வெளியேற்றுகிறார்கள் என்று வெளியிலே ஒரு தலைவர் நாளைக்கே எழுதக்கூடும். இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு பெருந் தன்மையாக நடந்துகொண்டிருக்கிறார் என்பதற்கு ஒரு நிகழ்ச் சியைப் பேரவைக்கு நான் சுட்டிக்காட்ட வேண்டும். இதே உறுப்பினர் சென்ற ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது இரண்டுமுறை இதேபோல தொடர்ந்து முறைகேடாக நடந்துகொண்ட காரணத்திற்காக வெளியேற்றப்பட்டார். இரண்டுமுறை அவர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டதற்காக, இதே பேரவை விதி 120-ன் கீழ் கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கும் வரலாகாது என்று நான் உத்தரவிட்டிருந்தேன். அது ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானம் நடைபெற்ற அந்தத் தொடர் முடிந்து இந்தத் தொடர் ஆரம்பிக்கிற வரையிலும் இந்தக்

கூட்டத் தொடர் என்பது ஏற்கனவே பேரவைத் தலைவரால் ஒத்தி வைக்கப்பட்டதே தவிர, மேதகு ஆளுநரால் முடித்து வைக்கப்படவில்லை. எனவே இந்தக் கூட்டத் தொடரும் அப்போது நடைபெற்ற தொடருடைய தொடர்ச்சிதான். விதிகளின்படி பார்த்தால் அந்த உறுப்பினர் இந்தக் கூட்டத் தொடருக்கும் வரலாகாது என்பதுதான் நடைமுறை. ஆனால் இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடத்திலே கூப்பிட்டு கருத்துக் கேட்கிறபோது ஒன்றை மிகத் தெளிவாகச் சொன்னார்கள்.

"விதி அப்படியே இருந்தாலும்கூட பெருந்தன்மையாக ஆளுங்கட்சியினர் நாங்கள் நடந்துகொள்ள விரும்புகிறோம். எனவே, உங்களுடைய சிறப்புரிமையைப் பயன்படுத்தி இந்தக் கூட்டத் தொடருக்கு அவர் வரவேண்டுமென்று நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்று அவர்கள்" என்னிடத்திலே தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு நான் எழுத்துமூலமாக உத்தரவு போட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அந்த வேண்டுகோளை ஏற்று 'அவர் இந்தக் கூட்டத் தொடருக்கு வரலாம்' என்று நான் அனுமதி அளித்தேன். அவர் வரக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, பேரவைத் தலைவரோ நினைத்திருந்தால், இயற்கையாகவே இந்தக் கூட்டத் தொடருக்கு அவர் வந்திருக்க முடியாது. முதல் நாளிலேயே பட்ஜெட் உரையின்போதே அவர் வந்திருக்கமுடியாது. இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெருந்தன்மை காரணமாக இந்தக் கூட்டத் தொடரில் அவரைக் கலந்துகொள்ள அனுமதித்தோம். அந்தப் பெருந்தன்மைக்கு உரியவர் அவர் இல்லை என்பதை நடைமுறையிலே இன்றைக்குக் காட்டியதால், வெளியேற்றப்பட்டிருக்கிறார். எனவே எஞ்சிய கூட்டத் தொடருக்கும் அவர் வரலாகாது. இந்தப் பேரவை வளாகத்திற்குள்ளும் நுழையலாகாது என்பதை என்னுடைய உத்தரவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள்.

திரு. கே. சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். உறுப்பினர் திரு. கே. சிங்காரம் இருக்கையில் இல்லை.